மூடநம்பிக்கை

தமிழ் வார வெளியீடு ..... ஆசிரியர் மு. கருணாநிதி.

விலை அணா 1 Regd. No. M

மூலை 1] திருவாரூர். பெரியார் ஆண்டு 69, மாசி 4. (17-3-48) புதன்கிழமை [ஒலி 10



திரு. டி. பி. வேதாசலம்.

அவரது கருத்து

கற்பிதங்களுக்கு மொழியே ஆதாரம்.

பேய் பிசாசு நம்பிக்கையால் உலகில் அநேக கொடுமைகள் கடந்து வருகின்றன. ஒருகாலத்தில் சூன்யம் வைத்தல் (Nicromancy or Black Magic) என்ற பொய் வதந்தியை நம்பி, அநேகர் கொல்லப்பட்டார்கள். அந்த "சூன்யத்தை"ப் போக்க, தலைச்சன் குழந்தைகளை (First Born) காவு கொடுத்தார்கள்! இக் கொடிய பாதகத்தால், ஆயிரக்கணக்கான உயிர்கள் மாய்ந்தன. ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டன. ஆயிரக்கணக்கான பெண்களை "மந்திரக்காரி" என்றும் சூன்யக்காரி என்றும் வதைத்துக் கொன்றார்கள். ஆயிரம் வருஷங்களாக ஐரோப்பா தேசத்தில் (Witch craft) என்று வழங்கி வந்த சூன்யம் என்ற பழக்க வார்த்தையால் கொல்லப்பட்ட (Wizards, Witches) சூன்யக்காரர்கள், சூன்யக்காரிகளுக்கு கணக்கு வழக்கேயில்லை!!! இம் மகா பாதகத்திற்கு அடிமையாக இருந்தது "ஆனமா" என்ற ஓர் கற்பிதச் சொல்லென அறிக. இந்தக் கற்பிதச் சொல்லுக்கே, நரக மோட்சங்களும், நிர்வாண சமாதிகளும், திதி திவசங்களும், கோயில்களும், குளங்களும் மருதிகளும், மாதாகோயில்களும், திருவிழாக்களும், தீர்த்தங்களும், பெரிய புராணங்களும், கந்த புராணங்களும், வேதங்களும், வேதாந்தங்களும் தோன்றியுள்ளன. இந்தச் சொல் ஒன்றை மாத்திரம், கற்பிதமென அறிந்த மாத்திரத்தில் எல்லாப் பேய், பிசாசுகளும், இருளன், வீரன் காட்டேரிகளும், சிவன், விஷ்ணு, பிரமாக்களும் 33 கோடி தேவர்களும், 48000 ரிஷிகளும், இவைகளுக்குக் கட்டியுள்ள கோயில், மருதிகளும், விசாரங்களும், (Viharas) புத்தர் கோயில்களும், சிவன் கோயில்களும் பறந்தோடிப் போமென அறிக, இதற்கு அதிகாட்சி வேண்டுமானால், இந்தக் கற்பித வார்த்தையை அறியாத குழந்தைகளுக்கும், மனிதர்களுக்கும் "கடவுள்" என்ற கற்பிதச் சொல்லே தெரியாது. இந்தச் சொல்லைக் கற்பிதச் சொல்லென அறிந்த விஞ்ஞானிகள், "கடவுளும்" கற்பிதச்சொல்லென்றே தீர்மானித்து வருகின்றனர். மனிதருக்குள சொற்கள் பரிணமித்து (Evolve) வருங்காலையில், "ஆன்மா" "உயிர்" "பிராணன்" என்ற சொற்கள் முதலில் தோன்றின. அந்த சொற்களிலிருந்து "போன்மா" "பேருயிர்" என்ற சொற்கள் பெறப்பட்டன. இந்தச் சொற்களை கடவுளென்ற பதத்திற்கு சாட்டி "மனிதன்" சிற்றுயிர் என்றும் "கடவுள்" பேருயிரென்றும் வழங்கி வந்தனர். இதுதான் கடவுளென்ற பதத்தின் பரிணாமம். (Evolution) ஆதி மனிதனுக்கு "ஆன்மாவும்" தெரியாது. "கடவுளும்" தெரியாது. பேச ஆரம்பித்த பிறகே, இந்தச் சொற்கள் கற்பிக்கப்பட்டன. ஆன்மாவுக்கும், கடவுளுக்கும் பாஷையே ஆதாரம். பாஷை தோன்றுவதில், எந்த மனிதனும் "ஆன்மா" வென்றும் "கடவு"ளென்றும் சிந்தித்து இருக்கவே மாட்டான். எந்த மிருகத்திற்காகிலும், ஆன்மாவென்றாகிலும் கடவுளென்றாகிலும் தோன்றினவா? இல்லை. என் அவைகளுக்கு பாஷை (Language) தோன்றுமையால். ஆதலின "கடவுள்" "ஆன்மா" "பேய்" "பிசாசு" முதலிய இன்னும் பல கற்பித கொள்கைகளுக்கு பாஷையே ஆதாரம்.

(எம். சிங்காரவேலு.)

முதலும்-முடிவும்!

(தில்லை துழக்கோ.)

... ...

அவன் ஆழ்ந்த யோசனையி லிருந்தான். கையிலிருந்த பேனு வடித்துக் கொண்டிருந்தது. காகித வடுகள் எந்தச் செய்தி யையும் ஏற்க அவன் மடியில் காத்துக் கிடந்தன. அவன் நெற்றி சுருங்குவதும் விரிவது மாக இருந்தது. ஏதோ ஒரு குறுகிய நோக்கும் உடனே அதைப் பின்னிட்டு ஒரு பரந்த எண்ணமும் அவன் மனதில் போட்டிபோட்டு எழுந்ததையே முகம் அப்படி காட்டிற்று.

யோசனை தீர்ந்து ஒரு முடிவு ஏற்பட்டு அம்முடிவு கையில் கருக்கு தெரிந்துவிட்டதுபோல் பேனு, மடியில் கிடந்த காகிதத் தில் பரபரவென எழுதியது :—

"சகோதர தொழிலாளிக ருக்கு மருதன் எழுதுகிறேன். தொழிலாளிகளில் பலரைப் போல நான் படிப்பறியாதவன் அல்ல; நிரம்பப் படித்திருக்கி றேன். 'படித்தவன்-அறிவாளி இப்படிச்செய்வது சரியா? அது கோழைத்தன மில்லையா? இத் தனை படித்து உலக இயல்பை அறிந்து, எதிர்த்து நிற்க முடி யாதவன் கோழைதானே? அது மட்டுமா? சுயநலம் கூடத்தான்! தனக்கு விடுதலை தேடிக்கொண்டு மனிஷி மக்களை பாதுகாக்க வீடு வது பாபமில்லையா? அப்போது நீ கடமை தவறியவனுகையாட்டா யா?' என்று இன்னும் பல என் தற்போதைய நிலையில் கற் பனைசெய்ய முடியாத பல கேள் விகளைக் கேட்டு நான் தவறு இழைத்தவனாக நீங்கள் முடிவு கட்டிவிடுவீர்கள். ஆனால் என் மனதில் அடிக்கும் புயல், எழும் புது அலை வேகம் உங்களால் உணரக்கூடியதா? இல்லை; என் னுல்தான் வெளிப்படுத்த இய லுமா? அறிஞன் எனத் தன்னை நினைத்துக் கொள்பவனும் உல கத்தாரால் மதிக்கப்படுபவனும் என்னை இப்போது இகழ்பவ னுமான ஒருவன் என் தற்போ தைய நிலையில் இருப்பானுனில் இந்த முடிவைத் தவிர வேறு என்ன செய்திருக்க முடியும் என்று எனக்கு விளங்கவில்லை. கற்பனையும் செய்ய முடியவில்லை.

எனக்குஉற்றவரை இதுதான். இதைச் சொல்வதால் நான் என்ன எதிர்பார்க்கிறேன் என் னுல் நீங்கள் இனியும் இப்படி நடக்கவிடக்கூடாது எனபதே. என் னுல் பழிவாங்கமுடியாத என் எதிரியை நீங்கள் பழிவாங்க வேண்டும். அவன் செய்யும் துரோகத்தை நீங்கள் இப் பொழுதாவது அறிந்து அவனை ஒதுக்கி வைக்கவேண்டும். உங் கள் உறவு அற்றுப்போவதால், உதவி கிடைக்காமல் போவதால் அவன் ஒரு பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். அப்படியே அவன்வழி வருவோரும் கற்றுக் கொள்ளவேண்டும். அதுவே என்போன்ற தொழிலாளிகளுக் கு, உலகச் சிறபிகளுக்கு அளிக் கும் நியாயமான பரிசாகும்.

முதலாளி முகுந்தனின் கருணை வழியும் முகத்தையும், சதைப்பற்றுன தேகத்தையும் பார்த்து ஏமாந்துவிடாதீர்கள். அவன் இருதயம் கல்லால் செய் யப்பட்டது; அது வெள்ளத் தில் கரையாது; வெந்தணலில் வேகாது! அதைத்திருட தொழி லாளிகளாகிய நாம் எத்தனை பாடுபட்டோம்! உதிரம்சொட்ட உழைத்துப் பார்த்தோம்; உண் மையே பேசிப் பார்த்தோம் பயன்?

ஓராயிரம் முதல்போட்டு ஆரம்பித்த ஸ்தாபனத்தில் இன்று வருமானம் மட்டும் ஒரு கோடிக்குமேல் வருகிறது. அன்று ஒருகவளத்திற்கு உழைத்தவர்கள் இன்றும் அதே ஒருகவளச் சோற்றுக்கு உழைக் கிறார்கள். ஆனல் இடையில் நுழைந்தவர்கள் தங்கள் காரியம் ஆகும்வரை காத்திருந்து பின் னன்றிய இடத்தை உதைத்து உயரப்பறந்து சுகபோகமடைகி றார்கள். தங்களை நம்பி உழைத் தத் தளர்ந்தோமே எங்களுக்கு உயர்வுகொடுக்கக்கூடாதாவென்று கேட்கக்கூடாது. "இடையில் வந்தவர்கள் உங்களுக்குத் தத்துப் பிள்ளைகளா? உழைத்தவனுக்கு உணவுஉடை கிடையாதா" எனக் கேட்கக்கூடாது. இப்படிப்பட்ட கூச்சலே கேட்கவிடாமல் பார்த் துக்கொள்ள இந்த இடையில் புகுந்தோர் இருக்கிறார்கள்.

"ஒன்றுகூடி உயர்வுகேட் போம்" என்றேன். என்குரல் முதலில் எழுந்ததற்காக என் தாழ்மையை விசாரியாமல் என் னைத் தலைவனுக்கி விட்டீர்கள். எனக்கே எல்லா உரிமையையும் அளித்தீர்கள். என் சொற்படி நடப்பதாக வாக்கு அளித்தீர் கள். நானும்-ஒருவனுக்கு எல் லோரும் உழைப்பதைவிட, எல் லோருக்கும் ஒருவன் உழைக் கும் உன்னதசேவை செய்வதில் உவகை கொண்டேன். முத லாளி இணங்காவிட்டால் வேலை நிறுத்தம் செய்வதென உறுதி

(7-ம் பக்கம் பார்க்க)

பிரஞ்சுப் பெரியார்

பிரான்சிலே உள்ள மாதா கோவில் அதிகாரியொருவருக்கு கி. பி. 1694-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் தேதி ஞாயிறன்று ஒரு குழந்தை பிறந்தது. பிறந்த வுடன் அக்குழந்தை உயிர் வாழும் என்று அருகிலிருந் தோர் எண்ணவில்லை. எனெ னில் அக்குழவி, மூச்சுத் திண றித் திணறி உயிர்விடும் நிலையி லேயே இருந்தது. எனவே, அதன் பெற்றோர்கள் அதற்குத் துரிதமாக ஞான நீராட்டுவதில் முனைந்தனர். எனெனில், ஞான நீராட்டப்படாத உயிர்களை கடவுள் வெறுக்கிறாரென்றும், அவைகள் இறந்ததும் நரகத்தில் கிடந்து வருந்தும் என்றும் எண் ணினர். ஞான நீராட்டுவித்த பாதிரி அக்குழந்தைக்கு பிராங்கோ மேரி அரோ (Francois Marie Arouet) என்ப பெயரிட்டழைத்தனன். அக் குழவியே பிற்காலத்தில் தன் போன்ற குருமார்களின் நயவஞ் சகங்களை, கோணல் நடத்தை களை உலகிற்கு எடுத்துக்காட்டி வைதிகத்திற்கு சாவுமணி அடிக் கப்போகிறது என்பதை அப் பாதிரி கனவிலும் கருதியிருக்க முடியாது.

பிராங்கோ பள்ளியிலே சேர்ந்து கல்வி கற்றதெல்லாம் ஏழே ஆண்டுகள் தாம். தம் பத்தாவது வயதிலே லூயிலீ கிராண்ட் (Lowis le Grant) எனும் பாதிரிமார்களால் நடத் தப்பட்ட பள்ளியொன்றில் சேர்ந்து சிறிதுகாலம் பயின்றார். இப்பள்ளியிலே பூகோளமோ, சரித்திரமோ வேறு எந்த ரசா யன நூலும் கற்றுக் கொடுக்கப் படவில்லை. ஏனெனில் அவை யெல்லாம் மதத்திற்கு விரோத மானவைகளெனக் கருதப்பட் டன. அங்கு அவர் கற்றதெல் லாம் கிரேக்க லத்தீன் மொழி களும், பெரும்பகுதி வாழ்க்கைக் குதவாதவைகளுமே. பதினே ழாம் ஆண்டில் அப்பள்ளியை விட்டு நீங்கி இலக்கியத்திலே தன் மனதைச் செலவிடலானார்.

தன் பத்தொன்பதாம் ஆண் டிலே பிராங்கோ ஒரு மங்கை யைக் காதலிக்கலானார். ஆனால் அப்பெண்ணின் தாய், காதலர் களின் சந்திப்பிற்கு பெருந் தடையாக விருந்தாள். ஆகவே அப்பெண்ணுக்கு கடிதங்கள் வரையலானார். இந்நிகழ்ச்சி வெளியாகவே பிராங்கோ தன், தந்தையினசிறைத்திற்காளானார். தான் சிறைசெல்ல நேரிடும் அல் லது நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்ற நிலை பிராங்கோ வுக்கு ஏற்பட்டது. இறுதியில் சட்டம் பயில ஒப்புக்கொண்டு அக்கொடுமைகளினின்று தப்பி னர். ஆயினும் அவர்மனம் நீண்டநாள் அதிலே லயித்திருக்க வில்லை. எனவே அதைவிட்டு புரட்சிகரமான நாடகங்களும், கட்டுரைகளும் எழுதுவதில் முனைந் தார். இக்காலத்தில் மதத்தைப் பற்றியோ, அரசாங்கத்தைப் பற்றியோ அவர் அறிந்திருக்க வில்லை. எனினும் அரசாங்கத்தை எதிர்த்து புரட்சிகரமானதொரு கட்டுரை வரைந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டு டூல் (Tulle) என்னுமிடத்திற்கு நாடு கடத்தப்பட்டார். சிறிது காலத் திற்குப் பின் மீண்டும் பிரான்சு வந்தடைந்தார். தன்னுட்டிற்கு வந்ததும் கொடுமைக்கு இருப் பிடமான பாஸ்டிலி சிறைக்கதவு கள் இவரை வரவேற்றன. ஓராண்டு இச்சிறையிலே கழித் தார். இங்குதான் பிராங்கோ வால்டையராக மாறினார்.

அக்காலத்தில் பிரான்சு நாட் டில் எங்கும் மன்னனின் கொடுங் கோலாட்சியும், மதகுருக்களின் கொடுமையும் மக்களை வாட்டின. மன்னனும், குருமார்களும் மக் களைத் தங்களின் விளையாட்டுக் கருவிகளாகக் கருதினர். சிறு குற்றங்களுக்கு சிறைத்தண்டனை யும், மரணதண்டனையும் தாரா ளமாக வழங்கப்பட்டன. தூக்கு மேடைகள் ஓய்வின்றி வேலை செய்தன. 1715-ல் பதினான் காம் லூயி இறந்த பிறகு அர சனது கட்டளைப்படி சிறையி லிருந்து அநேக கைதிகள் விடு விக்கப்பட்டனர். அந்தக் கைதி களின் பட்டியலை ஆராய்ந்த அதி காரிகளுக்கு அவர்கள் என் சிறையிடப்பட்டார்கள் என் பதே புரியவில்லை. கிரபாதி களை நீதிமன்றங்களிலே நிறுத் தப்பட்டனர். மன்னன், மத குரு, சீமான் இவர்களை மக்க ளின் வாழ்வை நிர்ணயிப்பவர்க ளாயிருந்தார்கள் நோய்வந்தால் அதை நீக்குவதற்கு வைத்தியர் கள் அழைக்கப்படுவதில்லை. இறக்தருவாயிலிருந்தாலும், பாதிரிமார்களை அழைக்கப் பட்டனர். அவர்களால் விலக் குத்தப்படும் மந்திரித்த காகித மொன்றே சகல நோய்களையும் தீர்க்கும் மருந்தாகக் கருதப் பட்டது. பாதிரிமார்களுக்கு வரும் வரும்படியை வைத்திய நிபுணர்கள குறைத்து விடுவார் கள் என்பதற்காக அவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட்ட னர். பேய், பூதம், சாத்தான் ஆகியவைகளைப்பற்றியே எங்கும் பேசப்பட்டன. இங்கிலே பிரான்

(6-ம் பக்கம் பார்க்க)

எழுத்துகளுக்குக்கூட இன உணர்ச்சியுண்டு! ஆனால்...

முரசொலி

பெரியார் ஆண்டு 69. பங்குனி 4
புதன் 17—3—48.

திராவிட மாணவரே!

உயர் நிலைப் பள்ளிகளில் 6-ம் உயர் வகுப்பு ஆண்டு இறுதித் தேர்வு ஆரம்பமாகி விட்டது. அடுத்து எஞ்சிய வகுப்புக்களுக்கும் ஆய்வு தவக்கப்பட்டுவிடும். கல்லூரி மாணவர்களும் இந்தக் கட்டத்திலிருக்கிறார்கள்.

"போங்காணும்... உங்களவா..... ஆரியன் திராவிடன்னு பேசவா..... ஆனல் படிப்பிலே 'சைபர்'. எங்காத்துக் குழந்தை களைப் பாரும், எவ்வளவு சூட்டிகை!"

ஆரிய திராவிடப் பிரச்சினையை ஆலாலசுந்தர் இளப்பும் போது அண்ணுசாமிய்யர்வாள் ஆணவத்தோடு கூறுவது இது.

திராவிட மாணவன் தேர்விலே தோல்வியடைவதற்குக் காரணம் அவன் திறமைக் குறைவா? அல்லது திராமனாகில் ஆரியம் செய்யும் சதியா? என்பதை நிர்ணயிக்க இந்நாட்டு ஆலாலசுந்தர்களுக்கு அவகாசமிருப்பதில்லை.

'பூமியை இரண்யாக்ஷன் பாயாக சுருட்டிக்கொண்டு போனான்'

"உருண்டையான பூமியை எப்படி பாயாக சுருட்ட முடியும்?"

பண்டித அய்யங்காருக்கும், பள்ளி மாணவனுக்கும் வகுப்பறையில் இந்த விவாதம். விவாதம் விபரீதத்தின் விளைவாகி—பரீட்சையில் படுவீழ்ச்சி யேற்பட்டு, பண்டிதரின் பலத்த பிரசாரத்தால் விபீஷணப்படையாக சைவ ஆசிரியத் திருக்கூட்டமும், வைணவ ஆசிரியத் திருக்கூட்டமும் அதற்கேற்ப தலையாட்டும் தலைமை ஆசிரியரும் அமையப்பெற்ற திருத்தணிக்கு மதிப்பளித்த மாணவனுக்கு சீட்டு கிழிக்கப்படும்.

மாணவன் அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளலாமா..... கூடாதா? என்பது பிரச்சினையல்ல; அவன் தன்னுடைய சமுதாய உணர்ச்சிக்குப் பெருமையளிப்பது குற்றமா?

ஆங்கிலநாட்டு மாணவன் தன்னை ஆங்கிலேயன் என்று கூறுவதும், ரஷ்ய நாட்டு மாணவன் தான் ரஷ்யன் என்று சொல்வதும், ஜப்பான் நாட்டு மாணவன் தான் ஜப்பானியன் எனப் பெருமைப்படுவதும் தவறு என்று கூறுவது எவ்வளவு மடமையாகுமோ... அதைப் போலத்தான் திராவிட நாட்டு மாணவன் தன்னை திராவிடன் என்று உணர்வதைக் கண்டிப்பதுமாகும்.

திராவிட மாணவனின் அறிவுக்கு அஞ்ஞானக்கு நிறை! தன்மான உணர்ச்சிக்குத் தாழ்ப்பான்! இத்தனை தடைகளை மீறி திராவிட சிங்கக்குட்டிகளின் இன உணர்ச்சி விருத்தியடைகிறது. இந்த விருத்தியை அந்த முகாமிலிருப்பவர்க்கு வருத்தத்தை யளிக்கிறது. ஆட்டு மந்தையின் காவலன் விழித்துக் கொண்டால் நரிக்கு வருத்தமிருக்காதா? பால் பாணை பத்திரப்படுத்தப் பட்டால் பூனைக்கு வருத்தமிருக்காதா?

மாணவர் உள்ளங்களில்—மாண்ட மறவரின் வாலாறுகள் புரளும்போதும், ரத்தம் அவரினத்தவர் என்ற சரித்திரம் சாற்றும் போதும், ஆண்டோம் ஆரியர்க் கடிமையாவோம் என்ற நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக ஓடும் போதும், மாணவன் பெருமூச்சு விடுகிறான். அது எதிரிகளுக்கு எரிமலையின் அனல் மூச்சாகத் தோன்றுகிறது. எரிமலையின் மேல் தண்ணீரையூற்றி அதை அணைக்க முயல்வதை போல திராவிட மாணவர்களின் பரீட்சைக் காலங்களில் கவிழ்க்க முனைவர். பரீட்சையின் தோல்வி—பிறந்த நாட்டு அன்னைப் பறித்துக்கொள்ளும்சக்தி பெற்றதல்ல.

ஆனலும் மாணவர்கள், படிப்பை அலட்சியப் படுத்திவிடக் கூடாது. திராவிடத்திற்கு உரிமை வாங்கித்தரும் ஆயுதம் அது! நமது கோட்டை மதில்களில் அமர்ந்திருக்கும் பிற்போக்கு சக்திகளைக் கொன்று குவிக்கும் வேட்டு அது!

திராவிடத் தனியாட்சியிலே .....பொருளாதார நிபுணர்கள் தேவை. போர்த்தளபதிகள் தேவை. மந்திரிகள் தேவை. வரலாற்று ஆசிரியர்கள் தேவை. மொழிப் புலவர்கள் தேவை. ஓவிய வல்லுநர்கள் தேவை. கலைஞர்கள் தேவை. இந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்பவர் இன்று வகுப்பறைகளிலே அமர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு திராவிட மாணவர் கூட்டம், எதிர்கால திராவிடத்தை எழில் தவழும் சோலையாக அமைக்க பயிற்சி பெறவேண்டும். படிப்புக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும். இனஉணர்ச்சி, இதயத்திலே புகைந்துகொண்டிருக்கட்டும். பள்ளி வாழ்வு முடிந்தது—அது பூகம்பமாக உருவெடுக்கட்டும், என்பதே நமதாசை.

எவ்வளவு நன்றாக பதில் எழுதினும் பார்ப்பனர் கையில் விளைத்தால் சிக்கனல் பாதி எண்ணிக்கைதானே கிடைக்கும்

ஏழ் ஒட்டும் மக்கள் எல்லாம் ஏங்கித் தவிக்கையிலே,

என்பதற்காக—அலட்சிய மனப் பான்மையை மாணவர்கள் அடி யோடுமறக்க வேண்டும். "படிப்பு அவனுக்குத்தான் வரும்" என்ற பல்லவியை பெற்றோர் களும் மறக்க வேண்டும். திரை மறைவுத் திருவிளையாடல் கடத் தும் தீயசக்தியையும், அதற்குத் துணைபோகும் ஆஞ்சநேயக் கூட் டத்தாரையும், பெற்றோர்கள் புரிந்து கொண்டால் தேர்வின் வெற்றி, திராவிட மாணவனைத் தேடிவரும். சூழ்ச்சியால் பாதிக் கப்படாத சில மாணவர்களா வது வெற்றிப்பாதையில் நடப் பார்களேயானால் நம் சொந்த நாட்டைக் காப்பாற்ற அறிஞர் படையொன்று தயாராகிற தென அகமகிழ்வோம். அதற் காகத்தான் "அன்பு கெழுமிய மாணவத்தோழர்களே! அலட்சி யம் விடுக!" எனமீண்டுமீறும்.

நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவை களாவது நல்லவைகளாக இருக்கட்டும். தேர்வில் கவனம் செலுத்துக. சதிகள் பல மோதி டினும் அஞ்சற்க! நம்மை சாய்க் கும் திட்டம், நம் திறமையா லேயே சாய்க்கப்பட வேண்டும். முட்டுக்கட்டைகளை முறித்து முன்னேறிக்கொண்டேயிருப் போம். சந்தர்ப்பங்கள் எதிரி களுக்கு அதிகநாள் துணைசெய்து விடமாட்டா? நியாயம் வெல்லும் காலம் ஆட்சிக்கு வரும். அந் தப் புதிய சகாப்தம்.....அதோ வெகு விரைவில் வந்து கொண் டிருக்கிறது

திராவிட மாணவரே! கடமை யிற் பின்வாங்குதல் வேண்டாம்.

★

பாக்கி அனுப்பாத வீற்பனையா ளருக்கு பத்திரிகை கண்டிப்பாய் நிறுத்தப்படும்.

குண்டு வீச்சு

விஞ்ஞான ஆராய்ச்சிக் கென்று ரஷ்யாவில் 1938-ம் வருட கணக்குப்படி 902 கழகங் கள் இருக்கின்றன.

* * *

"என்...நம் காட்டிலும் ஊரு க்கு ஒன்பது பஜனை மடங்கள் இருக்கின்றனவே" என்கிறான் ஆபீஸ் பையன்.

* * *

திருப்பூர் குமரனுக்கு சிலை அமைக்கவேண்டும்

"தமிழ் முரசு"

நல்லயோசனை. ஆனால்..... சிலையின் அடி பீடத்தில் தீராவி டர் கழகத்தாரால் கல் நாட்டப் பட்டது என்று சொல்லாமற்று விடாதீர்கள் அய்யா!

* * *

நமது அரசியல் சுதந்திரம், சமுதாய சுதந்திரமாக அமைய விரும்பினால் நமது பெண்களுக் கு—குறிப்பாக விதவைகளுக் குள்ள தடைகள் அகற்றப்பட வேண்டும்.

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்,
(ராஜமந்திரி, மார்ச், 10.)

ராதாகிருஷ்ணன் சொன்னால் தேசிய தினசரிகளுக்கு தித்திப் பாயிருக்கிறது. சுய மரியாதை இயக்கம் இத்தனை ஆண்டுகளாய் இதைச் சொன்னபொழுது பத் திரிகாசிரியர்களின் 'பவுண்டன் பேனாக்கள்' ஒத்துழையாமை செய்தன....அது ஏனோ?

* * *

மகா மகோபாத்தியாய டாக் டர் உ. வே. சாமிநாத அய்ய ருடைய சிலாநாட்டு வைபவம் சிரும் சிறப்புமாக கொண்டா டப்பட்டது. பிரதமர் உட்பட அனைவரும் வருகை தந்தனர். தமிழ்த் தாத்தா எனவும், முரு கன் அவதாரம் எனவும் புகழ் மாலைபாடப்பட்டது.

(செய்தி சுருக்கம்)

செய்யட்டும்; ஆனால் சுந்தரம் பிள்ளையும், க. ரா. நமச்சிவாய மூதலியாரும், ரா. மு. வேங்கடசாமி நாட்டாரும் தமிழ் நாட்டில் இருந்தார்கள்—தமிழ் வாழ்வு நடத்திலர்கள்—தமிழ்ப் புலவர்களை நாட்டார்க்கு அறி முகப்படுத்திருக்கள் என்பதை நினைக்க கூட ஆளில்லையே; என்றிகெட்ட திராவிடமே!..... ஒரு காலனு பூணூல் அந்த மாத்தமிழர் மார்பில் மினியாத காரணத்தாலா அவர்களை மறந் தாய்? வெட்கம்! வெட்கம்!!

* * *

நாடெங்கும் திராவிடர் கழ கத்தினர் வீடுகள் சோதனை! கருஞ்சட்டைகளைக் கைப்பற்றிச் சென்றனர்! விரோதமான ஆயு தங்கள் எதுவும் அகப்பட வில்லை!

(பத்திரிகைச் செய்தி)

அட பாவமே! முன்கூட்டியே ஏதாவது ஆயுதங்களை அவர்கள் வீட்டில் கொண்டுபோய் ஒளிய வைத்துவிட்டு சோதனையை நடத்தியிருக்கலாமே. சிறைச் சாலை வினை காலியாக இருப் பானேன்! எல்லாவற்றையும் விட மோசமாக "இந்து" பத்திரிகை பாடிய மூகாரியும் .....ஓமாந்தூராரின் அபயஸ்தானமும் அர்த்தமில் லாது போய்விட்டது என்பதை நினைத்து ஒரு "அய்யர்வாள்" ஆயாசப்படுகிறார்.

* * *

.....அதனால் தான் நான் தமிழ் மாகாணத்துக்கு மந்திரியாக வந்தேன்.

(பிரதமர் ரெட்டியார் பேச்சு.)

ஆந்திர மாகாணம் பிரிவதற் குள்ளேயே பிரதமர், தமிழ்மாகா

(8-ம் பக்கம் பார்க்க.)

தேரோட்டம் ஏன் உனக்கு? தியாகராசா!

3-ம் பக்க தொடர்ச்சி

சிலே மட்டுமல்ல; இங்கிலாந்து, ஸ்பெயின், ஜெர்மனி போன்ற வேறு ஐரோப்பிய நாடுகள் எங்கும் இருந்துவந்தது. எங்கும் மூடப் பழக்க வழக்கங்களே மலிந்துகிடந்தன. குருமார்களின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது.

வால்டையர் இவைகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். ஆண்டவனின் பெயர் கூறி அக்ரமத்தையே வாரியிறைத்த அடியார்களைக் கண்டார். மதத்தின் பெயர்கூறி மாபாச மனிதர்கள் உல்லாச வாழ்வு வாழ்வதை உணர்ந்தார். "ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தையும் காட்டவேண்டும்" என்று அன்பு மொழி அருளிய ஏசுவின் பெயர் கூறி, மக்களே உயிருடன் வதைக்கும் உபத்திரவங்களைக் கண்டார். தன்மனதிற் பட்டதை ஒளிக்காமல் உள்ளதை உள்ளவாறே உரைத்ததற்காக நிபராதிகள் தூக்கு மரத்திலே தொங்கவிடப்பட்ட கொடுமையைக் கண்டார். வறுமையின் உறைவிடமும், அறியாமையும், மூடநம்பிக்கையுமே மானிடகுலமே என்பதறிந்தார்.

மதத்தின் கொடுங்கோல் மன்னனும், லெவந்தகப் பாதிரிமார்களாலும், மக்களின் சிந்திக்கும் திறனற்ற தன்மையாலுமே மதம் காப்பாற்றப் படுகிறதேயன்றி அதற்கெனத் தனிப்பட்ட தெய்வீகத் தன்மை என்று கூறப்படுவதும் எதுவும் இல்லையென்று தெளிந்தார். எனவே இக்கொடுமைகளைக் களைந்து உண்மையை உணர்த்த முற்பட்டார் பகுத்தறிவைப் பரப்பும் நாடகங்கள், கட்டுரைகள், கவிதைகள் முதலியன இயற்றி வெளியிடலானார். மதத்தின் பெயரால்நடைபெறும்கொடுமைகளை வெட்ட வெளிச்சமாக்கினார். கேலிச்சித்திரங்கள் வரைவதில் தமக்கிருந்த ஆற்றலை உபயோகித்து மூட நம்பிக்கைகளைத் தகர்க்கத் தொடங்கினார். குருமார்களின் உண்மை சொரூபத்தையும், மதநூல்களில் மறைந்திருக்கும் புரடையும் இவரது எழுத்துக்கள் வெளியாக்கின. இவரது கருத்துக்கள் மக்கள் மனதிலே பதிய ஆரம்பித்தன.

பொய்மையின் அடிப்படையிலே கட்டப்பட்ட வைதீகக் கோட்டை இவரது தாக்குதலால் சரியத் தொடங்கிற்றும்! வாளினும் வலியதன்றோ எழுதுகோல்? கத்தோலிக்கரும், புரடஸ்டண்டுகளும், வால்டயரை ஒருமுகமாக எதிர்த்தனர். எதிர்ப்புக்களை எள்ளி நகையாடினார். மக்கள் இதயம் இவர்பால் திரும்பிற்று.

அவர் எழுதிய 'ஜீன்' என்னும் நாடகம் அவர் முன்னிலையில் நடித்துக் காட்டப்பட்டது.

எண்பத்தொன்பது ஆண்டுகள் உயிர்வாழ்ந்து பகுத்தறிவுப் பகலவன் என ஒளிவீசிய வால்டையர் 1778-ம் ஆண்டு மேமாதம் 30-ம் தேதி இரவு மறைந்தார். அவருடைய இறுதி நாட்கள் அமைதியாகக் கழிந்தன. வால்டையர் மறைந்தார். ஆனால் அவர் தூவிச் சென்ற பகுத்தறிவு விதை மக்களின் மனதிலே வேரூன்றி விட்டது.

மன்னன், மதகுரு, சீமான் ஆகியவர்களின் பிடியிலே சிக்கிச் சீரழிந்த பிரான்ச மக்கள், கொடுமைகளைக் களைந்து, கொடியர்களை வீழ்த்தி விடுதலைபெற 1789-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் தேதி கொடுமைக்கு இருப்பிடமான பாஸ்டிலி சிறையை, "லா மார்சலே" எனும் புரட்சிக் கவிதைபாடி தகர்த்தித் தரைமட்டமாக்கிய பொழுது அவர்கள் முழங்கியது; முழக்கம் 'வாழ்க வால்டையர்' என்பதாகும்

(எஸ். எல். சதாசிவம்,
தர்மபுரி.)

சிதம்பரம் ஜெயராம்.

1 தல்லதம்பி.
2 கிருஷ்ண விஜயம்.
3 விஜயகுமாரி.
4 அந்தமான் கைதி.
5 கிருஷ்ண பக்தி.
6 வேலைக்காரியில் (சில பகுதி)
7 மூன்லில் ரோஜா.

ஆகிய படங்களின் இசையமைப்பில் (மியூஸிக் டைரக்ஷன்) வெகு மும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

கடிதம் எழுதும் தோழர்கள் கவனிக்க.

முரசொலி சம்பந்தமான கடிதங்கள் யாவும், நிர்வாகி 'முரசொலி அலுவலகம்' திருவாரூர் என்ற முகவரிக்கு எழுதவும்.

முதலும் முடிவும்

(2-ம் பக்க தொடர்ச்சி)

கொண்டோம். என் வாயால் வேலைநிறுத்தம் செய்யுங்கள் என்று வரும்வரை வேலை செய்வது என்று தீர்மானித்தீர்கள்.

முதலாளி வீட்டிற்குள் சென்ற நான் வெற்றியுடன் வருவேன், அல்லது வீரமுழக்கம் செய்வேன் என்ற நினைத்து இந்த இரண்டு நாளாய் எதிர்பார்த்து ஏமாந்து நிற்பீர்கள். கைது செய்துவிட்டார்களோ என்று கற்பனை செய்வீர்கள். பணம் பெற்று தலைமறைவாய் இருந்து, தின்டாட விட்டுவிட்டானே என்று பதைப்பீர்கள்.

ஆம்: தோழர்களே! உங்கள் கற்பனை சரியே. பதைப்பதில் தவறு இல்லை. நான் கைது செய்யப்பட்டுவிட்டேன். பணம் பெற்று தலைமறைவாய் இருக்கிறேன்! இந்த துரோகத்திற்கு உங்கள்முன் இனி நான் தலை காட்டவேண்டுமா? ஐயோ! என்னைத் திட்டாதீர்கள், ஏசாதீர்கள், அவமானப்படுத்தாதீர்கள், என்மனைவி என்னை கைது செய்து விட்டாள். என் மனைவி பணத்தைப் பெற்றுக் கொண்டு என்னை மறைத்து விட்டாள். நான் என்ன செய்வேன்! நான் துரோகியா? நான் துரோகி இல்லை: இல்லை!

என்ன? என் மனைவியைப் பழிவாங்கப் போகிறீர்களா? ஐயோ என் குழந்தைகள்? இல்லை; இல்லை. அவளை ஒன்றும் செய்யாதீர்கள். அவள் துரோகம் செய்யவில்லை. துரோகம் செய்தவன் நான் தான்! இத்தனைகாலம் நம்பு தளர, கண்கள் மங்க உழைத்து உழைத்து என் முதலாளியை சுகபோகத்தில் வைத்தேனே ஒழிய, என் மனைவி காட்டிய அன்பிற்கு, முகம் கோணுது என் இன்பமே தன் இன்ப மெனக்கருதிய அவளுக்கு, எங்கள் இன்பக்கனியான குழந்தைகளுக்கு நான் என்ன பிரதிசெய்தேன்? நான் கயவன், அவள் அன்பின் உரு. என் துயரம் தீர்க்க குழந்தைகளின் நன்மைக்காக முதலாளியும், அவன் கூட்டாளியும் காட்டிய ஆசை வார்த்தையில் மயங்கினாள்.

"உன் கணவன் சும்மாக்கிடப்பவர்களைத் தூண்டிவிட்டு கலகம் விளைவிக்கிறான் அவனை போலீஸில் கைது செய்து கொண்டு போய்விடுவார்கள். குற்றம் செய்தவர்களுக்கு உதவுவது சட்டவிரோதம்; பின் நீ என்ன செய்வாய் உன் குழந்தைகள் என்னசெய்யும், பின் பிச்சை தான் எடுக்க நேரிடும். அவன் இதுவரை செய்த உழைப்பிற்கு உபகாரமாக நிறைய பணம் தருகிறோம். இரண்டுநாளைக்கு கலகக் காரர்களோடு சேராமல் பார்த்துக்கொள். பிறகு நீ பணத்துடன் வேறெங்காவது சென்று அவனுடன் நன்றாக வாழ். எல்லாம் உங்கள் நன்மைக்கே சொல்லுகிறோம்....." என்ற அவர்கள் வார்த்தைகள் வறண்ட பாலைவனத்தில் தேன் ஊற்றைக் காட்டியது போல் இருந்தது. அவள் ஆசையெல்லாம் கணவன்மீதும், குழந்தைகள்மீதும் தானே? அவள் துரோகமிழைக்கவில்லை. அப்படியிருந்தாலும் துரோகமிழைக்கிறோம் என்று அவளுக்குத் தெரியாது; கணவனுக்குக் கலகக்காரன் என்ற பெயர்வராது தடுக்கிறோம் என்று நினைத்தாள். அவர் இதுகாறும் உழைத்ததற்கு பலன் இந்தப் பணம் என்று நினைத்தாள். குடும்ப எதிர்கால செழிப்பே அவள் கண்முன் இருந்தது. வெளி உலக அறியும் அறிவு அவளுக்கில்லை. என்; இந்த காட்டு பெண் வர்க்கத்திற்கே அந்த வாய்ப்பு இல்லை! நான் முதலாளி வீட்டில் ஓர் அறையில் இருக்கும் போது அங்கே வந்து என்னை சந்தித்தாள். நடந்ததை எல்லாம் சொன்னாள். பணத்தில் கூட 'அச்சாரமாகக்கிடைத்த ஆயிரம் ரூபாயைக்காட்டினாள். அறியாத அவளுக்கு நம்நிலையை அறிவித்தேன். ஆசைகாட்டி மோசம் செய்வார்கள் என்று சொன்னேன். குடும்பத்தைத் தவிர வேறெதையும் புரிந்துகொள்ள முடியாத அவள், எதையும்கேட்க மறுத்து விட்டாள்.

கையோடு சொன்னாள். துயரப்பட்டு சொன்னாள். நான் கேட்கவில்லை. அவளுக்கு ஒரே வழிதான் இருந்தது, இரண்டு நாள் வரை என்னைக் கலகக் காரர்களுடன் சேரவிடக் கூடாது, என் நலத்தை உத்தேசித்து, குடும்ப நிலையை உத்தேசித்து அவள் அந்தக் காரியத்தைச் செய்துவிட்டாள். திடீரெனப் பின்வாங்கி நானிருந்த அறையின் கதவைமூடி வெளியே பூட்டிக்கொண்டாள். அவள் இரண்டு நாளைக்கு என்னைப் பிரித்துவைக்க நினைத்து அப்படிச் செய்தாள். ஆனால் ஆயுள் பூராவும் பிரிந்து நிற்போம்என்று அவள் அப்போது நினைக்கவில்லை.

நீங்கள் யார்மீது குற்றம்சாட்டுவீர்களோ? என்னையும், என் மனைவியையும் என்ன பழிச் சொல்லுக்கு ஆளாக்குவீர்களோ?

(8-ம் பக்கம் பார்க்க)

கறுப்பு சட்டையே நமது களங்கம் போக்கும்

திருவாரூர் நகரசபை.

தோழர் A.முத்துகிருட்டினன் அவர்களின் வேண்டுகோளின் படி பஸ்ஸ்டாண்டில் செல்வம் சிற்றுண்டி நிலையம் நடத்தும் இடத்தை ஏலமின்றி குத்தகைக்குக் கொடுப்பதாக 14-2-48ல் நகரசபையினர் ஏகமனதாகத் தீர்மானித்து, பிறகு .....மேலேயிருந்து காரணம் கேட்கிறார்கள், எனக் காட்டி... அவசர அவசரமாக 10-3-48ல் தனியாக ஒரு கூட்டம் (அந்த தனிப்பட்ட விஷயத்திற்காக) கூட்டி, அந்த "கொள்கையில்" முதலில்தீர்மானித்தது சரியில்லை .....இப்போது ஏலந்தான் போட வேண்டும் என.....ஒரு காங்கிரஸ் வேடதாரி உறுப்பினர் பிரேரேபித்து அதை மற்றொரு கதர் போர்வைக்காரர் திருத்தி முடன் ஆமோதித்து.....நகரசபை உறுப்பினர் தோழர் R சிங்கம் அவர்கள் "இது தகாது; முறையல்ல நகரசபையின் மதிப்பையும் குறைக்கும காரணம் கேட்டிருக்கிறார்கள் அதைக் கூறிவிட்டால் போதும்" என விளக்கம் கூறியுங்கூட கேட்காமல் "மெஜாரிட்டி" காங்கிரஸ் உறுப்பினர்களின் பலத்தினால் அதிக வோட்டுப்பெற்று...ஏலம் விடுதற்கு தீர்மானித்து விட்டார்கள். தோழர் முத்துகிருட்டினன் திராவிடர் கழக செயலாளர் என்ற ஆத்திரத்தைக் காங்கிரஸ் கொள்கில் தீர்த்துக்கொண்டது-தேர்தலுக்குப் பணஉதவி செய்தவையும் திருப்தி செய்துவிட்டது, எனப் பொதுமக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

என்ன இருந்தாலும் தனிப்பட்ட மனிதர்களின் வாழ்க்கையில்.....கட்சியின் போரால் கை வைப்பது கண்யமாகாது என்பதுபோல் கொள்கில் ஹாலில் மாட்டியிருந்த காந்தியார் படம் ஏனச்சிரிப்பு சிரித்தது. (?)

(7-ம் பக்க தொடர்ச்சி)

என் நெஞ்சை ஏதோ வாள் கொண்டு அறுக்கிறது. அதை என்னால்தாங்கமுடியவில்லை. வேதனைப்பட்டுக்கொண்டேவாழ விருப்பமில்லை. ஆகவே இதோ கிடக்கும் படுக்கை கட்டும் கயிறை விடுதலை தரும்படி கேட்டேன்! அதுவும்தயார்தான். கடவுள் தந்த உயிரை மாய்த்துக் கொள்ள உனக்கு உரிமைகிடையாது' என்பீர்கள். தினம் தினம் கடவுள் கம் உயிரைத் தீய்க்கிறாரே; இது தான் உரிமையின் லட்சணமா? பலரின் சக்தியை ஒருவன் ஆட்டிவைத்து அதன் பலனை அனுபவிப்பதை நான் குற்றமெனக்கருதி நானே தண்டனையை நிறைவேற்றிக் கொள்கிறேன்? நீங்கள் நியாயம் பேசுங்கள் ஏற்றுக்கொள்கிறேன் ஒரு தலைப்பாக தீர்ப்புக்கூறுவதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். என்றைய தினம் நீங்கள் முதலாளிவர்க்கமே இலலை என்று ஆக்குவீர்களோ அன்றுதான் நீங்கள் நியாயம் பேச—உரிமை கொண்டாட முடியும். அதுவரை எந்தபஞ்சமத்தலையும் நான்ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

இந்த நிலை.....",

அவன் பேனாகீழ்சிட்டது; மைவரவில்லை. அவன்முகச்சுருக்கம் விசாலமடைந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு புன்னகையின் ரேகை அவன்முகத்தில் படர்ந்தது. கைவிரல்கள் பேனாவை மெதுவாக நழுவவிட்டன. விரல்கள் வேகமாக எழுதிய கடிதத்தை எடுத்தன அதைச் சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறிவதில் இடக் கை விரல்களும் கலந்துகொண்டன.

மறுபடியும் பேனா கையிலேறியது. மற்றோர்காகிதம், செய்தியைபெற்றுக்கொள்ள தயாராய் முன்வந்தது. பேனா கீழ்வரும்வரிகளை அழகாக எழுதிற்று:—

குண்டுவீச்சு

5-ம் பக்கத் தொடர்ச்சி

ணத்தைப் பிரித்து மந்திரியாக வந்திருக்கிறார்? இந்தச்செய்தி யாருக்கும் இதுவரை தெரியவில்லையே என்ற மூக்கில் விரல் வைக்கிறார் காள்தோறும் பத்திரிகை படிக்கும் நண்பர் ஒருவர்.

* * * *

சிதம்பரம் நிர்வாணச்சாமி அய்யர் ஒரு பார்ப்பன இளம் பெண்ணுடன் திருப்பாபுலியூரில் திரிகிறது. (விடுதலை)

தணிக்கவஷ்டத்தை நீக்குவதற்காக ஒரு வேளை.....அரசாங்கத்தார் அந்த 'திருஞான சம்பந்தரை' அனுப்பி...பொதுமக்களையும் அவரைப்பின்பற்றச் செய்ய நினைத்திருக்கலாம்.

அந்த அம்மா, என் கூட செல்லுகிறார்கள்? என்று ஒருவாண்டுப்பயல் கேட்கிறான். சின்னப்பிள்ளையிடம் என்ன பதில் சொல்வது?

எரிமலை.

தோழர் A. K. வேலன் அவர்களின் உள்ளக் குமுறல் ஒரு நாடகமாக உருப்பெற்றிருக்கிறது. சிறந்த திராவிடத்திற்கு எழுச்சிதரும் சிந்தனைப் பொறிகளை 'எரிமலை' கக்குகிறது. காந்தை செல்வம் மன்றத்தாரின் நடிப்பும் தோழர் என். எஸ். சண்முக வடிவேலின் மேற்பார்வையும் பெரியார் அவர்கள் தலைமையில் நடந்த எரிமலை நாடகத்திற்குப் பெருமையை அதிகப் படுத்தின. நாட்டுக்குத் தேவையான புரட்சி நாடகம்.

"வாழ்க்கையில் வெறுப்பேற்பட்டு தற்கொலை செய்துகொள்கிறேன். இதற்கு எவரும் பொறுப்பல்ல."

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு காற்காலி தடாலென விழுந்த சப்தம் கேட்டு சிலர் ஓடிவருமுன், பெருள்களை சிதறிப்போகாது கட்டும் கயிறு அவன் உயிரைப்போகவிட்டது.

ஆசிரியரும், வெளியிடுபவரும்: மு. கருணாநிதி, திருவாரூர்.
அச்சிடுபவர்: கருணை. எம். ஜமால், அருணோதி மின்னியக்க அச்சகம், விஜயபுரம்.